பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 10 வெள்ளிக்கிழமை 24.06.2022 கதிர் 122

## நீதி அமைச்சர் யாழ். விஜயம்



நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம்

2

## பாடசாலை மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகம்

### ஆசிரியர் ஒருவரும் மாணவர் ஒருவரும் விளக்கமறியலில்; ஐந்து மாணவர்களுக்குப் பிணை; சிலரைத் தேடி வலைவீச்சு

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை மாணவிகள் பலர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆசிரியர் ஒருவரும், மாணவர் ஒருவரும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் ஐந்து மாண வர்களுக்கு நீதிமன்றில் பிணை வழங்கப்பட்டுள்ளதோடு மேலும் சிலரைத் தேடி பொலிஸார்மேலதிகநடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கற்பிக்கின்ற ஆசிரியர் மற்றும் மாணவர்கள் இணைந்து பல பாடசாலை மாணவிகளைப் பாலியல்ரீதியாகதுன்புறுத்தியமை தோடு பாலியல் சேட்டை புரிந்து பாலியல் துஷ்பிரயோகத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக நியமிக்கப்பட்டு ஆசிரியர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த நிலையில் குறித்த ஆசிரியர் மற்றும் மாணவர்கள் சிலர் இணைந்து மாணவிகள் பலரின் நிர்வாணப் புகைப்படங்களை வைத்து அச்சுறுத்தி அவர்களைப்பாலியல்துஷ்பிரயோகம் செய்த சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன. இவ்வாறு ஆசிரியர் ஒருவரும்

2

## சட்டவிரோதமாக ஆஸி. செல்ல முயன்ற மேலும் 35 பேர் கைது!



இலங்கையில் மேற்குக் கடற்பகுதியில், படகு மூலம் சட்ட விரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற35பேரைக் கடற் படை யினர் கைது செய்துள்ளனர்.

2

## ஜூலை 6 வரை காஸ் இல்லை; வரிசைகளில் நிற்கவேண்டாம்

### மக்களிடம் லிட்ரோ நிறுவனம் கோரிக்கை

இலங்கையில் அடுத்த மாதம் 6 ஆம் திகதி வரை சமையல் எரிவாயு கொள்கலன்களை கொள்வனவு செய்வதற்காக வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என லிட்ரோ நிறுவனம் பொதுமக்களைக் கோரியுள்ளது. எதிர்வரும் ஜூலை 5 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இரண்டு கப்பல்களில் 7 ஆயிரம் மெட்ரிக் டன் எரிவாயு நாட்டை வந்தடையவுள்ளது.


அந்தக் கப்பல்களில் உள்ள எரிவாயு கிடைக்கும் வரை கையிருப்பில் குறைந்தளவேனும்

2

## தமிழக அரசின் நிவாரணப் பொருள்களுடன் வந்தது இன்னுமொரு கப்பல்



அரிசி, பால்மாவுடன் அத்தியாவசிய உயிர்காக்கும் மருந்தும் உள்ளடக்கம்



பொருளாதாரப் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்காகத் தமிழக அரசால் மேலும் நிவாரணப்

2

## பஸ்களைத் தள்ளிக்கொண்டு வந்து பருத்தித்துறை நகரில் ஆர்ப்பாட்டம்



யாழ்., பருத்தித்துறை சாலை (டிப்போ) எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரவு நேரங்களில் கள்ளச் சந்தை

2

## வீட்டில் தனிமையில் வாழ்ந்த மூதாட்டி கழுத்தறுத்துக் கொடூரப் படுகொலை!

### காங்கேசன்துறைப் பொலிஸார் தீவிர விசாரணை



வீட்டில் தனிமையில் வாழ்ந்த மூதாட்டி கழுத்தில் வெட்டுக்காயங் களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ்., காங்கேசன்துறை - கொல்லங்கலட்டியில் இடம் பெற்றுள்ளது.

மூதாட்டி அணிந்திருந்த நகைகள் உள்ள நிலையில் கொலைக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்று காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று காலை மூதாட்டியின் வீட்டு வளாகத்திலுள்ள

2

## வத்தளையைச் சேர்ந்த நபர் முல்லையில் சடலமாக மீட்பு

வத்தளை - எலகந்த பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் முல்லைத்தீவு - பாலிநகரில் சடலமாக மீட்கப்பட்டார். பாலிநகரில் உள்ள விடுதியொன்றின் அறையிலிருந்து சடலம் மீட்கப்பட்டது.

குறித்த அறையில்

2

### தேசிய கணிதப் போட்டியில் வெற்றி பெற்ற

## வடக்கு, கிழக்கு மாணவர்கள் மூவர் இங்கிலாந்து பயணம்



வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 3 மாணவர்கள் தேசிய கணிதப் போட்டியில் வெற்றி பெற்று இங்கிலாந்துக்குப் பயணமாகியுள்ளனர்.

2

### எரிபொருள் தட்டுப்பாட்டால்

## யாழில் குதிரை வண்டியில் பயணிக்கும் அருட்தந்தை!



யாழ்ப்பாணத்தில் எரிபொருள் தட்டுப்பாட்டால் குதிரை வண்டியில் தனது பயணத்தை அருட்தந்தையர் ஒருவர் மேற்கொண்டு வருகின்றார்.

நாடு பூராகவும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் யாழ்ப்பாணத்தைச்

2



## ஊரெழுவில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம்

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழுப் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

2

## தேயிலை மலையிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு



நுவரெலியா மாவட்டம், வட்டவளை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட விக்டன் மேற்பிரிவு தோட்டத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

42 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். விறகு தேடுவதற்காக தனது வீட்டுக்கு அருகில்

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## சட்டவிரோதமாக ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை ஏற்றிச் சென்ற பல நாள் மீன்பிடி இழுவைப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பாணந்துறை கடற்பகுதியில் நேற்று மாலை கடற்படையினர் கண்காணிப்பு நடவடிக்கையை முன்னெடுத்த போது, சந்தேகத் துக்கிடமான முறையில் பயணித்த பல நாள் மீன்பிடிப் படகு ஒன்றைச் சுற்றிவளைத்து சோதனையிட்டுள்ளனர்.

அதன்போது, இலங்கையில் இருந்து கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமான முறையில் படகில் செல்ல முயற்சித்த, ஆட்கடத்தல்காரர்கள் 5 பேர் உட்பட 25 ஆண்கள், 4 பெண்கள் மற்றும் 6 சிறுவர்களைக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பலநாள் இழுவைப் படகின் இயந்திரத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டிருந்தது எனவும், குறித்த படகு நீண்ட கடல் பயணத்துக்குப் பொருத்தமற்ற வகையில் இருந்தது எனவும் மேலதிக ஆய்வுகளின்போது தெரியவந்துள்ளது.

திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு, நீர்கொழும்பு, கற்பிட்டி மற்றும் நுவரெலியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த, 6 முதல் 56 வயதுகளுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறு சட்டவிரோத கடல் பயணத்தை மேற்கொண்டுள்ளனர் என்று கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கை களுக்காக கொழும்புத் துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளனர்.

மக்களை ஏமாற்றி பணம் சம்பாதிக்கும் நோக்கில் ஆட்கடத்தல்காரர்கள் ஏற்பாடு செய்துள்ள இவ்வாறான ஆள் கடத்தலில் சிக்கி சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டுக்குப் பிரவேசிக்க முயற்சித்து சட்டத்தின் முன் சிக்குவதைத் தவிர்க்குமாறு பொதுமக்களைக் கடற்படை கோரியுள்ளது.

பழைய மற்றும் நீண்ட கடல் பயணத்துக்குப் பொருத்தமற்ற பல நாள் மீன்பிடிக் படகுகள் தொடர்ந்தும் இவ்வாறான ஆட்கடத்தலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன எனவும், அவ்வாறான படகுகளில் சட்டவிரோதக் குடியேற்றத்தை மேற்கொள்ள முற்பட்டால் உயிருக்குப் பாரிய ஆபத்து ஏற்படும் எனவும் பொதுமக்களைக் கடற்படை எச்சரித்துள்ளது.

## தேயிலை மலை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள தேயிலை மலைக்குச் சென்ற அவர் வீடு திரும்பாத நிலையில், பிரதேச மக்கள் அவரை தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையிலேயே குறித்த நபர், தேயிலை மலையில் இருந்து நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை வட்டவளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த சம்பவம் திட்டமிட்ட கொலையா அல்லது விபத்தா என்பது தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வீட்டில் தனிமையில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டத்துக்கு தண்ணீர் இறைப்பதற்குச் சென்ற உறவினர் ஒருவர் மூதாட்டி குருதிக் காயங்களுடன் சடலமாகக் காணப்பட்டதை அறிந்து காங்கேசன்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

78 வயதுடைய சாணை தவமணி என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஜூலை 6 வரை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிவாயு இல்லை என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அடுத்த மாதம் 10 ஆம் திகதியின் பின்னர், 25 ஆயிரம் மெட்ரிக் டன் எரிவாயு தாங்கிய பாரியதொரு கப்பல் மாலைத்தீவு கடற்பகுதியை அண்மிக்கவுள்ளது.

அங்கிருந்து சிறு கப்பல்கள் ஊடாக தொடர்ச்சியாக எரிவாயுவை நாட்டுக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, அடுத்த மாதம் 5ஆம் திகதியின் பின்னர், நாளாந்தம் 12.5 கிலோகிராம் நிறைக் கொண்ட 80 ஆயிரம் சமையல் எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## வத்தளையைச் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் வசித்து வந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்தது. நீதிவான் விசாரணைகளின் பின்னர், பிரேத பரிசோதனைக்காக சடலம் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் மல்லாவிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கு, கிழக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சிதம்பரா கணிதப்போட்டியில் மூன்று மாணவர்கள் வெற்றிபெற்றுள்ளனர். திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியை சேர்ந்த இரு மாணவர்களான செல்வன் யசோதரன் மிதுலான், செல்வன் உதயாரன் கோஷிகன் மற்றும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவனான செல்வன் சுகந்தன் சாகித் தியன் ஆகியோரே வெற்றி பெற்றுள் ளனர்.

இவர்கள் நாளை (25) இங்கிலாந்தில் நடைபெறவுள்ள சிதம்பரா கணிதப் போட்டி பரிசளிப்பு விழாவில் பங்குபற்றுவதற்காக விமானம் மூலம் நேற்று (23) இங்கிலாந்து சென்றுள்ளனர்.

## யாழில் குதிரை ......





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்ந்த குறித்த அருட்தந்தை தனக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் இடர்பாடுகள் காணப்படுவதன் காரணமாக குதிரை வண்டியில் தனது வழமையான போக்குவரத்தை மேற்கொள்கின்றார் என்று தெரிவித்தார்.

## நீதி அமைச்சர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரயில் நிலையத்தை வந்தடைந்த அமைச்சருக்கு வரவேற்பளிக்கப் பட்டது.

இந்து பௌத்த கலாசார பேரவையின் பொதுச் செயலாளர் எம்.டி. எஸ்.இராமச்சந்திரனின் அழைப்பையேற்று இந்து பௌத்த கலாசார பேரவையில் இரண்டாம் மொழி கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கலந்து கொள்கின்றார்.

மேலும் சில தினங்களுக்கு அவர் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## பஸ்களைத்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாபாரிகளுக்கு டீசல் வழங்கப்படுகின்றது எனக் குற்றஞ்சாட்டியும், தமக்கு உரிய ஒழுங்கில் வழங்கப்படுவதில்லை எனத் தெரிவித் தும் தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் இன்று போராட்டத்தில் ஈடு பட்டனர்.

பருத்தித்துறை பஸ் நிலையத் தில் இருந்து இன்று காலை தமது பஸ்களைப் பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு முன்பாகத் தள்ளிக்கொண்டு வந்து அவர்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசலைப் பெற்றுக் கொள்ள முடியும் என அரசு அறிவித்துள்ளது. ஆனால், எமக்கு உரிய ஒழுங்கு முறைகளில் பருத்தித்துறை சாலை (டிப்போ) முகாமையாளர் டீசலை விநியோகிக்கவில்லை. இரவு நேரங்களில் கள்ளச் சந்தை வியாபாரிகளுக்குப் பெருமளவான டீசல் வழங்கப்படுகின்றது. பயணிகள் சேவையில் ஈடுபடும் எமக்கு உரிய ஒழுங்கில் டீசல் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை - என்று போராட்டக்காரர்கள் குற்றஞ் சாட்டினர்.

அதேவேளை, கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர், யாழ்., கோண்டாவில் சாலை (டிப்போ) எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தமக்கு டீசல்கள் வழங்கப்படுவதில்லை எனத் தனியார் பஸ் சாரதிகள் போராட்டம் நடத்தியிருந்தனர். அவர்களுடன் யாழ். மாவட்ட செயலர் க. மகேசன் பேச்சுக்களை நடத்தி உரிய ஒழுங்கில் டீசல் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பேன் என உறுதியளித்து இருந்த நிலையில், பருத்தித்துறை சாலைக்கு (டிப்போ) எதிராக இன்று போராட்டம் நடத்தப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

## ஊரெழுவில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் ஊரெழு மேற்கு கணேசா வித்தியசாலைக்கு அருகில் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது எனப் கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 30 வயதுடைய சிவலோகேஸ்வரன் மதுரகன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் இன்று அதிகாலை 2 மணியளவில் வீட்டு முற்றத்தில் உள்ள மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

இந்தச் சம்பவத்துக்கான காரணம் இதுவரை தெரிய வராத நிலையில், சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## நிவாரணப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. நிவாரணப் பொருள்கள் அடங்கிய கப்பல் இன்று காலை கொழும்புத் துறை முகத்தை வந்தடைந்துள்ள நிலையில், அவற்றில் உள்ள பொருட்கள் இந்தியத் தூதுவரால் இலங்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

குறித்த கப்பலில் 14 ஆயிரத்து 712 டொன் அரிசி, 250 டொன் பால்மா மற்றும் 38 டொன் அத்தியாவசிய உயிர் காக்கும் மருந்துகள் இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே தமிழக அரசின் முதல் கட்ட நிவாரணப் பொருள்கள் கடந்த மாதம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் சிலரும் செய்த சேட்டையை முல்லைத்தீவு இளைஞர்கள் கண்டறிந்து ஆசிரியர் மற்றும் மாணவர்களின் தொலைபேசியை எடுத்துப் பார்வையிட்டபோது பலமாணவிகளின் நிர்வாணமாக எடுத்துக் கொண்ட வீடியோக்கள், மாணவிகளின் நிர்வாணமாக எடுத்துக்கொண்ட புகைப்படங்கள், மாணவிகளுடன் உடலுறவு கொண்ட வீடியோக்கள் அதில் இருப்பதை அவதானித்து அதனைச் சோதித்தபோது குறித்த ஆசிரியரும் மாணவர்களும் இந்தச் செயற்பாடுகளில் தொடர்பு கொண்டிருந்தமை அறியக் கூடியதாக இருந்தது.

குறித்த ஆசிரியர் மாணவர்களைப் பயன்படுத்தி மாணவர்களை மாணவிகளோடு காதல் வலையில் விழுத்தி அவர்கள் ஊடாக அந்த மாணவிகளுடைய நிர்வாணப் புகைப் படங்களைப் பெற்று ஆசிரியரும் அந்த மாணவிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவம் உறுதிப்படுத் தப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் இந்த ஆசிரியருடைய தொலைபேசியில் இருந்த ஆவணங்கள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண்கள் சிலரை விசாரணைக்கு அழைத்த பொலிஸார் அவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய போது ஒரு மாணவியை ஆசிரியர் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் குறித்து ஆசிரியர் தலைமறைவாக இருந்த நிலைமையில் குறித்த ஆசிரியரோடு சேர்ந்து இவ்வாறான செயற்பாட்டிங்களை முன் னெடுத்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 6 மாணவர்களைப் பொலிஸார் கைதுசெய்திருந்தனர்.

17, 18 வயதுகளையுடைய இந்த ஆறு மாணவர்களையும் முல்லைத்தீவு நீதிவான்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது மாணவர் ஒருவர் எதிர்வரும் 30ஆம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டதோடு ஏனையவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறான பின்னணியில் தலைமறைவாக இருந்த ஆசிரியர் இன்று சட்டத்தரணி ஒருவர் ஊடாக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ரி.சரவணராஜா உத்தரவிட்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## லாயக்கற்ற தலைவர்கள்

இலங்கையின் இன்றைய மோசமான பொருளாதார நிலைமைக்கு – நெருக்கடிக்கு – பிரதான காரணம் என்ன என்பதை பிரிட்டனின் மூத்த ராஜதந்திரி ஒருவர் அம்பலப்படுத்தி இருக்கிறார். இலங்கையை இந்த நெருக்கடியில் பிணை எடுக்க முன்வந்திருக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கு அவர் இது தொடர்பில் ஒரு முன்னெச்சரிக்கையும் விடுத்திருக்கின்றார்.

உதவித் திட்டங்களை தவறான திசைக்கு திருப்பி விடும் ஊழல். மோசடி நடவடிக்கைகளினால்தான் இலங்கை இன்று இந்தக் கட்டத்தை அடைந்திருக்கின்றது. அது தொடர்பில் இலங்கைக்கு நீண்ட மோசடிச் சரித்திரம் உண்டு. சர்வதேச நாணய நிதியம் இந்த உண்மையைக் கவனத்தில் கொண்டு விடயங்களை அணுக வேண்டும் என்று அவர் ஆலோசனை வழங்கி இருக்கிறார்.

இலங்கை அரச நிர்வாகத்தின் ஊழல், மோசடி, குளறுபடிகள்தான் நாட்டின் இந்த மோசமான பொருளாதார நெருக்கடிக்கும் பின்னடைவுக்கும் பிரதான காரணம் என்று பொருளாதார நிபுணர் நிஷாந்த டி மெல் குறிப்பிட்ட கருத்தை ஒட்டித் தமது பிரதிபலிப்பை இவ்வாறு வெளிப்படுத்தி இருக்கின்றார் அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் திறந்த சமூக மன்றத்தின் தலைவர் மார்க் மக்கலோ பிறவுண். பிரிட்டனின் முன்னாள் அமைச்சரான இவர் ஐ.நா. பொதுச் செயலாளராக கோபி அனான் இருந்த காலத்தில் ஐ.நாவின் பிரதி செயலாளர் நாயகமாகப் பணியாற்றிய ராஜதந்திரி. இப்போது பிரிட்டனின் பிரபுக்கள் கவுன்ஸிலில் கடந்த 15 வருடங்களாக இடம்பெற்று வருகிறார்.

அவரின் இந்தக் கருத்தைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தனது டுவிட்டர் செய்தியில் வழிமொழிந்துள்ளார்.

“இதனால்தான் கோட்டாபய ராஜபக்ஷ தொடக்கம் முழு பொதுஜனப் பெரமுனவினரும் பதவியை விட்டு உடனடியாக இறங்க வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன். எந்த இடைக்கால ஏற்பாட்டிலும் பொதுஜன பெரமுன சேர்க்கப்பட முடியாதது. அத்தகைய நிபந்தனையை ஜே.வி.பி. விதித்திருப்பது முற்றிலும் சரியானதுதான். இத்தகைய ஊழல் ஆட்சிப் பீடத்துடன் இணங்கிப் பணியாற்ற முன் வந்த ரணிலின் தீர்மானம் பிழையானது” – என சுமந்திரன் தனது டுவிட்டில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

குறுகிய அரசியல் நோக்கங்களை அடைவதற்கும், தாங்களும் தங்களைச் சார்ந்தோரும் குறுக்கு வழியில் நிதி ஈட்டுவதற்கும் அரசுத் திட்டங்களைத் தவறான வழிக்குத் திசை திருப்பிய அரசியல் தலைமைத்துவமே இன்றைய நெருக்கடிகளுக்கு சூத்திரதாரி என்பது சாதாரண பாமரனுக்கும் இன்று புரியும்.

இந்த வரலாற்றுத் தவறை இழைத்து, நாட்டை சரித்திரத்தில் முன்பின் இல்லாத அவல நிலைக்குள் தள்ளிவிட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாம் தோற்றுப்போன ஜனாதிபதியாக பதவியை விட்டு இறங்க மாட்டேன் என அடம்பிடிப்பது பெருங்குற்றமாகும்.

அவர் மட்டுமல்லர், அவரின் கேவலம் கெட்ட நடவடிக்கைகளால் முழு நாடுமே தோற்றுப் போன தேசமாகிவிட்ட அவலத்துக்கு மத்தியில், தம்மை மட்டுமே சிந்திக்கும் இத்தகைய சுயநல தலைவர்களினால் வீழ்ச்சியிலிருந்து இந்த நாட்டை மீட்டெடுக்கவே முடியாது என்பது திண்ணம்.

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தாக்குதல் உடுவில் இளைஞன் மர்மமாகச் சாவு?

யாழில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்ற கைக்கலப்பில் காயமடைந்த இளைஞன் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உடுவில் செபமாலை கோவிலடியைச் சேர்ந்த செல்வரத்தினம் பிரசாந்த் (வயது–23) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது–

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு உயிரிழந்த இளைஞனும், அவரது நண்பரும் எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக யாழ்ப்பாணம் மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்றிருந்தனர்.

அதன் போது, குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முறைகேடுகள் இடம் பெறுகின்றன எனத் தெரிவித்து இருவரும் அவற்றைத் தமது கையடக்கத் தொலைபேசியில் காணொலி எடுத்த போது, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்தவர்களுடன் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. முரண்பாடு முற்றிய நிலையில் இரு இளைஞர்கள் மீதும் தலைக்கவசம் உள்ளிட்டவற்றால் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் இருவரும் காயமடைந்துள்ளனர். பின்னர் அங்கிருந்தவர்கள் அவர்களை தாக்குதலாளிகளிடம் இருந்து காப்பாற்றி அங்கிருந்து அனுப்பி வைத்திருந்தனர். மறுநாள் திங்கட்கிழமை தாக்குதலுக்கு இலக்கான இளைஞர்களில் ஒருவர் நெஞ்சு வலி என யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சென்றுள்ளார்.

வைத்தியசாலையில் அவரை விடுதியில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டது. இந் நிலையில் புதன்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் உயிரிழப்பு தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# சுகாதார ஊழியர்களுக்கான எரிபொருள் வழங்கும் திட்டம் இன்று முதல் அமுல்!

சுகாதார ஊழியர்களுக்கான எரிபொருள் வழங்கும் திட்டம் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் நடைமுறைக்கு வந்தது.

அதன்படி நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 74 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சுகாதார ஊழியர்களுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் எரிபொருள் வழங்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சுகாதார ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.


# 400 விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே வெளிவிவகார அமைச்சின் தூதரக சேவை

வெளிவிவகார அமைச்சின் தூதரக சேவைப் பிரிவினால், இன்று(வெள்ளிக்கிழமை) 400 விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் சேவை வழங்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூதரக சேவைப்பிரிவில் முன்னெடுக்கப்படும் சீரமைப்பு பணிகள் காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# பொதுமக்கள் மீதான இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தை ஏற்கமுடியாது!

## அமெரிக்க செனட்டின் வெளியுறவுக்குழு டுவிட்



ஆயுதம் ஏந்தாத பொதுமக்கள் மீது படையினர் துப்பாக்கி பிரயோகத்தில் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என அமெரிக்க செனட்டின் வெளியுறவுக்குழு டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளது.

ஆயுதம் ஏந்தாத பொதுமக்கள் மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொள்வது ஏற்றுக் கொள்ளமுடியாத விடயம். இராணுவத்தின் வன்முறைகள் மற்றும் சீற்றத்தை ஏற்படுத்தக்கூடிய துஷ்பிரயோகங்களை தொடரமுடியாது என்பதை இலங்கை தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது. சர்வதேச அளவில் வேண்டுகோள் விடுப்பவர்களுடன் இணைந்து கொள்வது தொடர்பாக பெருமிதம் அடைகிறேன் என செனட் உறுப்பினர் தெரிவித்தார்.

குற்றவாளிகள் பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என அமெரிக்க செனட்டின் வெளியுறவு குழு தெரிவித்துள்ளது.

# விமான பயணிகள் வருகையில் பாரிய சரிவு ஏற்பட்டுள்ளதாம்

## அதிகாரிகள் தகவல்

பயணிகள் வருகை மற்றும் புறப்பாடுகளில் பாரிய சரிவு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இலங்கைக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை கடுமையாகக் குறைந்துள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் பணிப்பாளர் ஹொான் சுமனசேகர தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுநோய் காரணமாக நாட்டுக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு குறைந்திருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நாட்டில் நிலவும் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக வருகையாளர்கள் மற்றும் செல்பவர்களின் எண்ணிக்கை 10 ஆயிரமாகக் குறைந்துள்ளதாக ஹொான் சுமனசேகர தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
வெள்ளிக்கிழமை
24.06.2022

# ஹீத்ரோ விமான நிலையத்தில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

ஹீத்ரோ விமான நிலையத்தில் உள்ள நூற்றுக்கணக்கான பிரிட்டிஷ் எயார்வேஸ் தொழிலாளர்கள் ஊதியம் தொடர்பாக, வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்பாலும் செக்-இன் ஊழியர்களாக இருக்கும் யுனைட் மற்றும் ஜி.எம்.பி. யூனியன் உறுப்பினர்கள் வியாழக்கிழமை தொழில் துறை நடவடிக்கையை ஆதரித்தனர்.

மொத்தம் 700 தொழிலாளர்கள் கோடை விடுமுறையின் போது வேலைநிறுத்தம் செய்ய உள்ளனர், அப்போது பயணிகளின் தேவை தொற்றுநோய்க்கு முந்தைய நிலைக்கு அருகில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொற்றுநோய் உச்சக்கட்டத்தின் போது விதிக்கப்பட்ட 10 சதவீத ஊதியக் குறைப்பு மீண்டும் பணியமர்த்தப்படாததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

சுமார் 500 யுனைட் உறுப்பினர்கள் தொழில்துறை நடவடிக்கைக்கு ஆதரவாக 94.7 சதவீத வாக்குகளைப் பதிவு செய்தனர், அதே நேரத்தில் 95 சதவீத ஜி.எம்.பி. உறுப்பினர்கள் வெளிநடப்புகளை ஆதரித்தனர். எதிர்வரும் நாள்களில் வேலை நிறுத்த திகதி உறுதி செய்யப்படும்.

முன்மொழியப்பட்ட நடவடிக்கை ஹீத்ரோவில் உள்ள பிரிட்டிஷ் எயார்வேஸ் ஊழியர்களில் 50 சதவீதத்துக்கும் குறைவான வாடிக்கையாளர்களை எதிர்கொள்ளும் பாத்திரங்களில் மட்டுமே உள்ளது, மேலும் வாக்களிக்கப்படாத பிற வாடிக்கையாளர் சேவை ஊழியர்களும் உள்ளனர்.




வேலைநிறுத்தங்கள் தொடரும் பட்சத்தில், ஹீத்ரோவில் மூன்று மற்றும் ஐந்து முனையங்களில் இருந்து செயல்படும் பிரிட்டிஷ் எயார்வேஸ் செக்-இன்களை கையாளும் மேலாளர்கள் உட்பட பணியாளர்களை உள்ளடக்கும் திட்டங்களைக் கொண்டுள்ளது என்பது புரிந்து கொள்ளப்படுகிறது.

இருப்பினும், பயணிகளுக்கு இன்னும் இடையூறு ஏற்படும், குறிப்பாக டெர்மினல் ஐந்தில், ரத்து செய்யப்படுவதற்கு வழிவகுக்கும், இது பல தினசரி விமானங்கள் கொண்ட வழித்தடங்களில் கவனம் செலுத்தும்.



## அமெரிக்க நாடாளுமன்ற செனட் சபையில் துப்பாக்கி கட்டுப்பாட்டு மசோதா நிறைவேற்றம்

அமெரிக்க நாடாளுமன்ற செனட் சபையில் துப்பாக்கி கட்டுப்பாட்டு மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. 2வது மற்றும் இறுதிக் கட்ட வாக்கெடுப்பில் மசோதாவுக்கு ஆதரவாக 65, எதிராக 33 வாக்குகள் பதிவாகின. 1993ல் துப்பாக்கி கட்டுப்பாட்டு சட்டம் நிறைவேறி 10 ஆண்டுக்கு பிறகு காலாவதியான நிலையில் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## நடிப்புக்கு முழுக்கு பிராட் பிட் முடிவு



நடிப்புக்கு முழுக்கு போட்டுவிட்டு ஓய்வு எடுக்க ஹாலிவுட் நடிகர் பிராட் பிட் முடிவு செய்துள்ளார். ஏஞ்செலினா ஜுலியை திருமணம் செய்த பிராட் பிட், ஹாலிவுட் படங்களிலும் பிசியாக நடித்து வந்தார். சில ஆண்டுகளுக்கு முன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு ஏஞ்செலினாவை விவாகரத்து செய்தார். இந்நிலையில் பிராட் பிட் நடித்துள்ள புல்லட் டிரெய்ன் ஹாலிவுட் படம், வரும் ஓகஸ்ட் 5ம் திகதி திரைக்கு வருகிறது. இந்த படத்தின் புரமோன் நிகழ்ச்சியில் பிராட் பிட் பங்கேற்றார். அப்போது அவர் கூறும்போது, ‘30 வருடமாக நடித்துக் கொண்டிருக்கிறேன். அதிகமாக உழைத்துவிட்டேன். இனி எனக்கு ஓய்வு தேவைப்படுகிறது. வயதும் கூடிக் கொண்டே செல்கிறது. தொடர்ந்து என்னால் நடிக்க முடியும் என்றாலும் ஒரு கட்டத்துக்கு பிறகு புதியவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்குவதுதான் நல்லது. நானும் அந்த கட்டத்துக்கு இப்போது வந்திருக்கிறேன். புல்லட் டிரெய்ன் படம்தான் எனது கடைசி படமாக இருக்கும்’ என்றார்.



# ஆப்கான் நிலநடுக்கம் அதிகரிக்கும் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானின் பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள பக்திகா மாகாணத்தில் நேற்று முன்தினம் அதிகாலை நேரத்தில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இது கோஸ்ட் நகரத்தில் இருந்து 44 கி.மீ. தொலைவில் மையம் கொண்டிருந்தது. ரிக்டர் அளவுகோலில் 6.1 புள்ளிகளாக இந்த நிலநடுக்கம் பதிவானாலும் பெருத்த உயிர்ச்சேதங்களையும், பொருள் சேதங்களையும் ஏற்படுத்தி விட்டது.

இந்த நிலநடுக்கத்தினால் 1,500 பேர் படுகாயம் அடைந்திருக்கின்றனர் எனவும் முதல் கட்ட தகவல்கள் தெரிவித்தன. இந் நிலையில், நிலநடுக்கத்தில் சிக்கி 1,000க்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஆயிரக்கணக்கான மண் வீடுகள் தரைமட்டமாகின. தகவல் தொடர்புகள் முடங்கின. அங்கு பெய்து வரும் பலத்த மழையால் மீட்புப் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. ஈரான், கட்டாரில் இருந்து 2 விமானங்களில் மனிதநேய உதவிப் பொருள்கள் வந்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபையும் உதவிக்கரம் நீட்டியுள்ளது.

## உக்ரைன், மால்டோவாவுக்கு அந்தஸ்து ஒப்புதல் அளித்தது ஐரோப்பிய ஒன்றியம்

நேட்டோவில் இணையக் கூடாது என்ற வலியுறுத்தலை ஏற்காததால் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. உக்ரைனுக்கு நிதி உதவி மற்றும் ஆயுத உதவி செய்துவரும் ஐரோப்பிய ஒன்றியம், அந்நாட்டை உறுப்பினராக சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏனென்றால் உறுப்பு நாடு என்றால்தான் நேரடியாக ராணுவ உதவி செய்ய முடியும். ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது என்பது எளிதான காரியம் அல்ல.

அதற்கான நடைமுறைகள் முடிந்து இறுதிக்கட்டத்தை அடைய பல ஆண்டு காலம் ஆகும். இதற்கிடையே, உக்ரைன் கடந்த பெப்ரவரி 28ம் திகதி அன்று விண்ணப்பம் கொடுத்துள்ளது. அந்நாட்டுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் முதலில் வேட்பாளர் அந்தஸ்து வழங்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

அதேபோல் மால்டோவா நாட்டுக்கும் இன்று வேட்பாளர் அந்தஸ்து வழங்கப்படும் என்று தெரிகிறது. இந்நிலையில், பெல்ஜியம் நாட்டின் பிரஸ்ஸல்ஸ் நகரில் ஐரோப்பிய ஒன்றியத்தின் 2 நாள் மாநாடு தொடங்கியது. இதில் உக்ரைன் மற்றும் மால்டோவாவை வேட்பாளராக 27 உறுப்பு நாடுகள் அங்கீகரித்தன.



# அரசாங்க இல்லத்தை காலி செய்தார் மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரே



தனக்கு எதிராக சிவசேனா அதிருப்தி எம்.எல்.ஏக்கள் தொடர்ந்து போர்க்கொடி உயர்த்தி வருகின்றமையால், தான் தங்கியிருந்த அரசு இல்லத்தை மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரே நேற்று இரவு காலி செய்தார். அவர் விரைவில் ராஜினாமா செய்யவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகாராஷ்டிராவில் அமைச்சர் ஏக்நாத் ஷிண்டே தலைமையில் 34 க்கும் மேற்பட்ட சிவசேனா எம்.எல்.ஏக்கள் அரசுக்கு எதிராக அணி திரண்டுள்ளனர். அவர்கள் அனைவரும் அசாமில் தங்கியுள்ளனர். 34 எம்.எல்.ஏக்கள் மட்டுமல்லாமல் சில சுயேச்சை எம்.எல்.ஏக்களும் ஏக்நாத் ஷிண்டேவுக்கு ஆதரவு தெரிவித்திருப்பதால் முதல்வர் உத்தவ் தாக்கரே தலைமையிலான அரசு பெரும்பான்மைப் பலத்தை இழந்திருக்கிறது.

காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சிகளுடனான கூட்டணியை முறித்துவிட்டு பா.ஜ.கவுடன் சிவசேனா கைகோர்க்க வேண்டும் என அக்கட்சியின் அதிருப்தி எம்.எல்.ஏக்கள் வலியுறுத்தினர். ஆனால், இதனை முதல்வர் உத்தவ் தாக்கரே ஏற்க மறுத்துவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, மகாராஷ்டிரா ஆளுநருக்கு 34 சிவசேனா அதிருப்தி எம்.எல்.ஏக்கள் நேற்று மாலை கடிதம் அனுப்பினர். அந்தக் கடிதத்தில், முதல்வர் உத்தவ் தாக்கரேவிடம் 11 எம்.எல்.ஏக்கள் மட்டுமே உள்ளனர். அதே சமயத்தில், அமைச்சர் ஏக்நாத் ஷிண்டேவுக்கு 34 எம்.எல்.ஏக்கள் ஆதரவு தெரிவித்திருக்கிறோம். எனவே சிவசேனா சட்டப்பேரவைக் குழுத் தலைவராக ஏக்நாத் ஷிண்டேவை நியமிக்க வேண்டும், எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சூழலில், மும்பையில் தான் தங்கியிருந்த அரசு இல்லத்தை முதல்வர் உத்தவ் தாக்கரே நேற்று திடீரென காலி செய்துவிட்டு தனது பூர்வீக இல்லத்துக்கு குடும்பத்தினருடன் குடிபெயர்ந்தார்.

அரசு இல்லத்தை காலி செய்வதற்கு முன்பாக ஒரு காணொலியை உத்தவ் தாக்கரே வெளியிட்டார். அதில், எனது சொந்த எம்.எல்.ஏக்களே நான் வேண்டாம் என என்னிடம் நேரடியாகத் தெரிவித்திருந்தால், அடுத்த நொடியே முதல்வர் பதவியில் இருந்து வெளியேறி இருப்பேன். எனது ராஜினாமா கடிதம் தயாராக உள்ளது. அடுத்த முதல்வராக வருபவர் சிவசேனாவை சேர்ந்தவராக இருந்தால் நான் மகிழ்ச்சியடைவேன், என உணர்ச்சிவசப்பட்டு நா தழுதழுக்க அவர் கூறியுள்ளார்.





## டெல்லி துணை முதல்வர் மீது நூறு கோடி மான நஷ்ட வழக்கு

### அசாம் முதல்வரின் மனைவி தாக்கல்

டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா மீது, அசாம் முதல்வரின் மனைவி 100 கோடி ரூபா இழப்பீடு கோரி மானநஷ்ட வழக்குத் தொடர்ந்துள்ளார்.

அசாமில் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி ஆட்சி நடக்கிறது. இங்கு கொரோனாப் பெருந்தொற்று காலத்தில் பி.பி.இ. எனப்படும் முழு உடல் கவச உடைகள் வாங்கியதில் மோசடி நடந்ததாக டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியா சமீபத்தில் ஒரு குற்றச்சாட்டைத் தெரிவித்தார். இந்த மோசடியில் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மாவின் மனைவி ரினிகி புயன் சர்மாவுக்கு தொடர்பு உள்ளதாகவும் அவர் கூறினார். இதற்கு ஹிமந்த பிஸ்வா சர்மா மறுப்புத் தெரிவித்தார்.

இந்த நிலையில், டெல்லி துணை முதல்வர் மணீஷ் சிசோடியாவுக்கு எதிராக நீதிமன்றத்தில் ரினிகி புயன் சர்மா, 100 கோடி இழப்பீடு கோரி மான நஷ்ட வழக்கினைத் தொடர்ந்துள்ளார். அந்த வழக்கு விவரத்தில், முழு கவச உடை ஒப்பந்தம் தனக்கு அளிக்கப்படவில்லை என்றும் 1,485 கவச உடைகளை நன்கொடையாக தான் அளித்தேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

## அராஜக போக்கில் சர்வாதிகாரத்தின் வெளிப்பாடாகவே அ.தி.மு.க. பொதுக்குழு நடைபெற்றதாக குற்றச்சாட்டு!



நேற்று நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக் குழுவானது முழுக்க முழுக்க சட்டத்திற்கு புறம்பானது என அ.தி.மு.கவின் துணை ஒருங்கிணைப்பாளர் வைத்திலிங்கம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சென்னை பசுமை வழிச் சாலையில் உள்ள அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பி.எஸ்ஸின் இல்லத்தில் துணை ஒருங்கிணைப்பாளர் வைத்தியலிங்கம் செய்தியாளர்களைச் சந்தித்து பேசினார். அப்போது அவர், அ.தி.மு.க. அவைத் தலைவரை ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர்தான் தேர்வு செய்ய வேண்டும். ஆனால், தற்போது நடைபெற்றுள்ள பொதுக் குழுக் கூட்டம் என்பது முழுக்க முழுக்க சட்டத்திற்கு புறம்பானது.

23 தீர்மானங்களை மட்டுமே நிறைவேற்ற வேண்டும் என நீதிமன்றம் தெரிவித்து இருந்தது அதனை நீராகரிக்கும் உரிமை யாருக்கும் இல்லை. தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை என்றால் பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்வும் செல்லாமல் சென்று விட்டது. எனவே இந்த பொதுக்குழு என்பது செல்லாது.

அ.தி.மு.கவில் அவைத்தலைவர் பதவி என்பது பொதுச்செயலாளர் மூலம் தேர்வு செய்யப்பட்டுவந்தது. அப்படிப்பார்த்தால் அவைத்தலைவர் பதவியை ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் மட்டுமே தேர்வு செய்ய முடியும். அவைத் தலைவர் மட்டும் பொதுக்குழுவை கூட்ட முடியாது. அராஜக போக்கோடு சர்வாதிகாரத்தின் வெளிப்பாடாகவே இந்த பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது.

இது தொடர்பாக நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடுக்க உள்ளோம். இரட்டைத் தலைமையோடு செயல்பட்டால் மட்டுமே மீண்டும் ஆட்சிக்கு வர வாய்ப்புள்ளது, ஒற்றைத் தலைமை அழிவுப் பாதைக்கு அழைத்து செல்லும். இது குறித்து பேச்சு நடத்த தற்போதும் தயாராக உள்ளோம், என்று தெரிவித்திருக்கிறார்.

## இந்தியாவில் கொரோனா சடுதியாக அதிகரிப்பு தினசரி தொற்று எண்ணிக்கை 17 ஆயிரமாம்

இந்தியாவில் கொரோனா தினசரி பாதிப்பு நேற்றைய தினம் பதிவான அதற்கு முந்தைய 24 மணி நேரத் தரவுகளில் 13,313 ஆக இருந்த நிலையில், இன்று பதிவான கடந்த 24 மணித்தியாலத்தின் தரவுகளில் அது 17 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

இது தொடர்பாக இந்திய மத்திய சுகாதாரத்துறை இன்று காலை வெளியிட்ட அறிக்கையில், கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 17,336 பேருக்கு தொற்று உறுதியாகி உள்ளதாக கூறப்பட்டுள்ளது. தினசரி பாதிப்பு 17 ஆயிரத்தை தாண்டுவது கடந்த 124 நாள்களில் இது முதல் முறை ஆகும்.

இதுவரை கொரோனாத் தொற்றால் இந்தியாவில் பாதிக்கப்பட்டவர்கள் மொத்த எண்ணிக்கை 4 கோடியே 33 லட்சத்து 62 ஆயிரத்து 294 ஆக உயர்ந்துள்ளது. தொற்று பாதிப்பில் இருந்து 13,029 பேர் மீண்டுள்ளனர். இதுவரை குணமடைந்தவர்கள் எண்ணிக்கை 4 கோடியே 27 லட்சத்து 49 ஆயிரத்து 56 ஆக உயர்ந்தது. தற்போது 88,284 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன.



## கொரோனா கால செலவுகளின் தாக்கம் அரசு நிகழ்வுகளுக்கு விதித்த தடை நீக்கம்

கொரோனா கால செலவுகளை முன்னிட்டு அரசு நிகழ்வுகளுக்கு முன்பு விதிக்கப்பட்டிருந்த பல்வேறு கட்டுப்பாடுகளை நீக்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் என்.முருகானந்தம் வெளியிட்ட அரசாணையில், கொரோனாப் பரவலைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட செலவுகளை முன்னிட்டு, அரசுக்கு ஏற்படும் மற்ற பல்வேறு செலவீனங்களைக் குறைக்கும் வகையில், தமிழக அரசு கடந்த 2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டுகளில் தடை உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தது.

அந்த உத்தரவுகளை அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், தன்னாட்சி வாரியங்கள் ஆகியவை பின்பற்ற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

தற்போது தமிழகத்தில் பல்வேறு காரணங்களுக்காக நிதிச் சூழ்நிலையில் சிக்கல் தொடர்வதாலும், ஜி.எஸ்.டி. இழப்பீட்டை பெறுவதில் நிலையற்ற தன்மை இருப்பதாலும், நிர்வாக காரணங்களுக்காகவும் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மறுபரிசீலனை செய்ய அரசு முடிவு செய்தது. அந்த வகையில் பொருளாதார காரணங்களுக்காக முந்தைய உத்தரவில் சில மாற்றங்களைக் கொண்டு வந்து அரசு உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, புதிய அரசு அலுவலகங்களை உருவாக்குவது, ஏற்கனவே இருக்கும் உள்கட்டமைப்புகளை பராமரிப்பது ஆகியவற்றில் செலவீனங்களைக் கட்டுப்படுத்தி பிறப்பிக்கப்பட்ட முந்தைய உத்தரவு தொடர்கிறது. அரசு நிகழ்வுகளில் அரசு அதிகாரிகளுக்கான மதிய உணவு, இரவு உணவு, பொழுதுபோக்கு ஆகியவற்றுக்கான செலவுகளுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படுகிறது.

அரசின் தேவைகளுக்கு மட்டுமே அதிகாரிகள் பயணிக்கலாம் என்றும் ஆய்வுக் கூட்டங்கள் அனைத்தும் பாதுகாக்கப்பட்ட இடத்தில் காணொலிக் காட்சி மூலம் நடத்தப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடும், மாநிலத்தை விட்டு வெளியே செல்ல விமானப்பயணங்களை மேற்கொள்ளக் கூடாது என்ற உத்தரவும் தொடர்கிறது.

பணியிடமாற்றத்தினால் ஏற்படும் பயணச் செலவை குறைப்பதற்காக பொதுவான பணியிட மாற்றங்களை நிறுத்தி வைத்த உத்தரவின் நிலை தொடரும். பரிசுப் பொருள்கள், பூங்கொத்துகள், சால்வைகள், நினைவுப் பரிசுகள், மாலைகளை அரசுச் செலவில் இருந்து மேற்கொள்ள விதிக்கப்பட்ட தடை நீக்கப்படுகிறது. 20 பேருக்கு மேல் பங்கேற்கும் மாநாடுகள், கருத்தரங்குகள், கலாசார நிகழ்ச்சிகளுக்கு விதிக்கப்பட்ட தடை விலக்கப்பட்டுள்ளது.



# இந்த நெருக்கடிக் காலத்தில் ஆசிரியர்களின் மீது அழுத்தம்

## கிழக்கு மாகாணப் பணிப்பாளருக்கு முறையீடு



ஆசிரியர் விடுமுறை மற்றும் கைவிரல் அடையாள இயந்திரத்தின் பயன்பாடு தொடர்பில் சுற்றுநிருபம் ஒன்றினை நடைமுறைப் படுத்தி, அதிபர்களுக்கு அறிவுறுத்துமாறு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா பக்ஸ் மூலம் அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலையில் ஆசிரியர் தொடர்பாகப் பல்வேறு பிரச்சினைகள் முன்வைக்கப்படுகின்ற போதிலும் மாணவர் கல்வி நலனுக்குப் பாதிப்பில்லாத வகையில் தங்களால் முன்னெடுக்கப்படும் விடயங்களை நாம் பாராட்டுகின்றோம்.

எரிபொருள் பிரச்சினை ஏற்பட்டுள்ள இக்காலப்பகுதியில் கல்வியமைச்சு விடுத்துள்ள பொதுவான அறிவுறுத்தல்களுக்கமைய, பாடசாலைகளை முன்னெடுத்துச் செல்லல் தொடர்பில் தங்களால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய சில அதிபர்கள் செயல்படுகின்ற விதம் பாராட்டுக்குரியதாக அமைந்துள்ள போதிலும், பல அதிபர்கள் ஆசிரியர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாதவர்களாகத் தான்தோன்றித் தனமாகச் செயற்படுகின்றனர்.

இதற்கு வலயக் கல்விப்பணிமனை உயர் அதிகாரிகள் சிலரும் உடந்தையாக இருக்கின்றனர் என அறியமுடிகிறது. எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பது தொடர்பில் அதிபர்களுக்கான தெளிவில்லாமையும் இவ்வாறான முறைகேடுகள் நடைபெறுவதற்கான காரணமாகும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

எரிபொருள் பிரச்சினையால் முழு நாடும் முடங்கிப் போயுள்ள நிலையில் தூர இடங்களுக்குச் செல்கின்ற ஆசிரியர்களைப் பாடசாலைக்கு எவ்வாறாயினும் வர வேண்டும் எனக் கட்டாயப்படுத்துவது, வரவிட்டால் சொந்த விடுமுறையாகக் கருதுவதாகப் பயமுறுத்துவது, கைவிரல் அடையாள இயந்திரத்தின் பயன்பாட்டை முன்வைத்து ஆசிரியர்களின் விடுமுறையைக் கணக்கெடுப்பது உள்ளிட்ட அராஜகங்கள் அதிபர்களால் அரங்கேறி வருகின்றன.

இது பற்றி சில ஆசிரியர்கள் கேள்வியெழுப்பிய போது மாகாணப் பணிப்பாளர் இது தொடர்பில் முறையான அறிவிப்பை விடுக்கவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

இவ்விடயங்களைக் கருத்திற் கொண்டு கைவிரல் அடையாள இயந்திரத்தை இடைநிறுத்துவதோடு, இக்காலப்பகுதிக்கான ஆசிரியர் விடுமுறை தொடர்பான கல்வியமைச்சின் அறிவுறுத்தல்களை உள்ளடக்கிய எமது மாகாணத்திற்குப் பொருத்தமான சுற்றுநிருபமொன்றை அவசரமாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுங்கள். - அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.



# காத்தான்குடி இளைஞனின் மரணம் குறித்து விசாரணை

காத்தான்குடியில் தூக்கத் துக்கு சென்ற இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை தூக்கத்திலிருந்து எழும்பாத நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி 03, ஹுதா வீதியில் வசிக்கும் 23 வயதுடைய பதுர்தீன் சுபைக் அகமட் எனும் இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து உறவினர்கள் காத்தான்குடி பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதையடுத்து காத்தான்குடி பொலிஸார் மட்டக்களப்பு நீதிவான் பீட்டர் போலின் கவனத்திற்கு கொண்டு வந்தமையையடுத்து நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டமையுடன் உறவினர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலத்தை பிரேத பரிசோதனை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சடலம் பிரேத பரி சோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்த இளைஞன் 40 தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருந்து பிணையில் விடுதலையாகி இருந்தார் எனவும் தெரியவருகிறது.

# கல்முனை சந்தைக்கு அருகில் சீர்கெட்டுக் கிடக்கும் வடிகான்

(நூருள் ஹுதா உமர், எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை மாநகர பொதுச் சந்தைக்கு அருகில் உள்ள வடிகான் சீர்கெட்டு நீர்தேங்கி துர்நாற்றம் வீசுகின்றமை குறித்து பொதுமக்கள் முகம் சுழிக்கின்றனர்.

இந்த வடிகான் துப்புரவு இன்றியும், வடிகானின் ஒரு பகுதி உடைந்தும், வடிகானின் இடைநடுவே பக்கத்துச் சுவர் ஒன்றும் உடைந்து அதன் மேல் விழுந்தும் உள்ளன. இதனால் நீண்ட நாள்களாக கழிவுநீர் ஓடாமல் தேங்கி காணப்படுகின்றமையினால் இடையிடையே துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் வீதியில் பயணிப்போர், அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும் சந்தைக்கு வருகின்ற பொதுமக்கள் என எல்லோரும் அசௌகரியத்தை எதிர் நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாளாந்தம் ஆயிரக்கணக்கான பொது மக்கள், பாடசாலை மாணவர்கள், இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர்.

வடிகானுக்கு முறையாக மூடியில்லை. அருகில் புற்கள் வளர்ந்து பற்றையாகக் காட்சியளிக்கின்றன. அருகில் உள்ள சாந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தின் எல்லை சுவரின் ஒரு பகுதி பல மாதங்களுக்கு முன்னர் உடைந்து வடிகானில் விழுந்து, வடிகானின் நடுவே பெரிய தடையாக காணப்படுகிறது. இதனால் கழிவுநீர் ஓடாமல் தேங்கி நிற்கிறது. அத்துடன் இதனுள் உடைந்த நிலையில் கூரை ஓட்டுத்துண்டுகள், கற்கள், பிளாஸ்டிக் போத்தல்கள், தகரடின்கள், பொலித்தீன் பைகள், குப்பைகள் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் சுகாதார சீர் கெடு ஏற்படவாய்ப்புள்ளது. இந்நிலைமை நீண்ட நாள்களாகக் கவனிப்பாரற்று உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

கல்முனை மாநகர சபை பிரதேசங்களில் திண்மக் கழிவகற்றல், வடிகான் முகாமைத்துவம் சிறப்பாக இயங்குவதாக மாநகர ஆணையாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் இதுபோன்று சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலான பல இடங்கள் மாநகர பிரதேசங்களில் காணப்படுகின்றன.



இதனை அண்மித்த பகுதியில் பொதுச் சந்தைக்கு வரும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் நெரிசலை எதிர்நோக்குவதையும் அவதானிக்க முடிகின்றது. இது தொடர்பில் கல்முனை மாநகர முதல்வர், மாநகர ஆணையாளர், சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மட்டக்களப்பு நாவற்குடாவில் பொதுச்சந்தைக்கு அடிக்கல்



(க.கிருபாகரன்)

உலக வங்கியின் உள்ளூர் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் பங்களிப்புடன் மட்டக்களப்பு மாநகரசபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள நாவற்குடா பொதுச்சந்தைக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் நாகராஜா மதிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் பிரதம அதிதியாகவும், மாநகரசபை உறுப்பினர்களான ம. நிஷ்கானந்தராஜா மற்றும் த.இராஜேந்திரன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு நகரை அண்டிய நாவற்குடா, மஞ்சந்தொடுவாய் பிரதேசங்களை வர்த்தக ரீதியாக முன்னேற்றும் நோக்கிலும், அப்பிரதேசங்களை அண்டிய உற்பத்தியாளர்களுக்கான சந்தைப்படுத்தல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும் இந்த சந்தைக் கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளதாக மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

இச்சந்தைக் கட்டடத் தொகுதி விற்பனைக் கடைகள் மற்றும் கலாசார மண்டபம் என்பவற்றை உள்ளடக்கியதாக இரண்டு கட்டங்களாக நிருமாணிக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்பக் கட்டப் பணிகள் உலக வங்கியின் உள்ளூர் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் பங்களிப்புடன் மூன்று கோடி பத்து லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயனற்றுப்போயுள்ள தாமரைக் கோபுரம்!



அபிவிருத்தி திட்டங்கள் என சீனாவுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட பல திட்டங்கள் இன்று நாட்டுக்குச் சுமையாகியுள்ளதுடன் அவை பெரும் கடன் சுமையை உருவாக்கியுள்ளன.

மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை இன்று எதிர்கொண்டுள்ள நிலையில் வருமானத்தை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட திட்டங்கள் கூட பயனற்றதாகியுள்ளன. அவ்வாறானதொன்றாகவே தாமரைக் கோபுரம் காணப்படுகின்றது.

தெற்காசியாவின் உயரமான கோபுரம் என்ற பெருமையைக் கொண்ட தாமரை கோபுரம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரையில் எந்தவிதமான பயனும் நாட்டுக்கு கிடைக்கப் பெறவில்லை.

கொழும்பு மத்திய பகுதியில் தாமரை கோபுர நிர்மாணப் பணிகள் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தன. சுமார் 7 வருடங்களில் இது தெற்காசியாவிலேயே பெரிய கோபுரமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த தாமரை கோபுர நிர்மாணத்துக்காக 10 கோடியே 45 லட்சம் அமெரிக்க டொலர் நிதி செலவிடப்பட்டுள்ளதாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சீனாவினால் 6 கோடியே 70 லட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கப் பெற்றதுடன், எஞ்சிய தொகையை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு செலவிட்டுள்ளது.

356 மீற்றர் உயரமான இந்தக் கோபுரம், தெற்காசியாவிலேயே மிகப் பெரிய கோபுரமாகக் கருதப்படுவதுடன், உலகிலேயே 19 ஆவது உயரமான கோபுரமாகவும் திகழ்வதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த கோபுரத்தின் அடிப்பரப்பு 30 ஆயிரத்து 600 சதுரஅடி என அளவிடப்பட்டுள்ளது.

சுமார் 200 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதிகளும் இந்த இடத்தில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கோபுரத்தின் ஊடாக இனிவரும் காலங்களில் இலங்கை தொலைக்காட்சி மற்றும் வானொலிகள் டிஜிற்றல் தொழில்நுட்பத்தில் ஒளி, ஒலிபரப்பு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோபுரத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது மாடிகள் தொலைக்காட்சி மற்றும் வானொலி சேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

தாமரைக் கோபுரத்தின் மூன்றாவது மற்றும் நான்காவது மாடிகள் வைபவங்களை நடத்துவதற்கான மண்டபங்களாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

6 ஆவது மாடியே மிகவும் சிறப்பு இடத்தை பிடிக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது 6 ஆவது மாடியில் அமைக்கப்பட்டுள்ள உணவகம், சுழலும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. உணவு உட்கொண்டவண்ணமே கொழும்பு நகர் முழுவதையும் கண்டுகளிக்கும் சந்தர்ப்பம் இதனூடாக மக்களுக்கு கிடைக்கிறது.

7ஆவது மாடி, கோபுரத்தின் உயரமான இடத்துக்குச் சென்று கொழும்பு நகரின் அழகை கண்டுகளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

7ஆவது மாடிக்கு மேல் அமைக்கப்பட்டுள்ள கோபுரம், டிஜிற்றல் தொழில்நுட்பத்தினை வழங்கும் கோபுரமாக உள்ளமை சிறப்பம்சமாகும்.

8 மின்தூக்கிகளைக் கொண்ட இந்தக் கோபுரத்தில் நொடிக்கு 7 மீற்றர் உயரும் இலங்கையின் முதலாவது வேகமான மின்தூக்கி பொருத்தப்பட்டுள்ளமையும் விசேட அம்சமாக கருதப்படுகின்றது.

தாமரை கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையால், இலங்கையின் தொலைக்காட்சி மற்றும் வானொலி சேவைகள் இனிவரும் காலங்களில் டிஜிற்றல் மயப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டதுடன் இலங்கை தேசிய பொருளாதாரத்துக்கு பாரியளவில் நன்மையளிக்கும் எனக் கருதப்பட்டது.

ஆனால் இன்றளவில் நாட்டுக்குப் பயனுள்ளதாக தாமரைக் கோபுரம் அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 33 லட்சம் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா உதவித் தொகை

பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ள குடும்பங்களுக்கு இந்த மாதம் முதல் 5 ஆயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்படும் என பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது.

பொருளாதார ரீதியாக கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ள 33 லட்சம் குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி ஆகியன இதற்கான நிதியுதவிகளை வழங்கியுள்ளன என பெண்கள், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் நீல் பண்டார கூறியுள்ளார். ஆறு மாதங்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, பணவீக்கம், உணவு பற்றாக்குறை மற்றும் எரிபொருள் நெருக்கடி என்பன காரணமாக மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பல குடும்பங்கள் அன்றாடம் உணவை சாப்பிடுவதில் கூட பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பலர் தொழில் வாய்ப்புகளை இழந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

அத்துடன் அன்றாடம் உழைத்து சாப்பிடும் வறுமைக் கோட்டில் வாழும் மக்கள் பெரும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

## இலங்கை மத்திய வங்கியினால் 20 ரூபா குற்றிநாணயம் வெளியீடு



இலங்கையில் உத்தியோகபூர்வசனத்தொகை கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டு 150 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

முதன்முதலில் இலங்கையில் சனத்தொகை கணக்கெடுப்பு 1871 ஆம் ஆண்டு நடத்தப்பட்டுள்ளது.

150 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு இலங்கை மத்திய வங்கியால் அதனை நினைவுகூரும்முகமாக 20 ரூபா ஞாபகார்த்த குற்றிநாணயம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் வெளியிடப்பட்ட குற்றி நாணயம் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரமவிற்கு மாவட்ட புள்ளிவிவரவியலாளர் ஸ.சரீப்டீனால் வழங்கி வைக்கப்பட்டது. நினைவு நாணயக்குற்றி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள், உட்பட மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும் வழங்கிவைக்கப்பட்டன.

அத்துடன் பிரதேச செயலாளர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட புள்ளிவிவரவியலாளர் தெரிவித்தார்.

# கதிர்காமம் பாதயாத்திரைக் குழு இன்று கோணேஸ்வரரைத் தரிசனை







(காரைதீவு நிருபர் சகா)

யாழ் - கதிர்காமம் பாதயாத்திரை குழு வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றான பாடல் பெற்ற திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தை இன்று வெள்ளிக்கிழமை தரிசிக்கின்றது.

கடந்த 15 நாள்களாக யாழ் மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டத்தைக் கடந்து திருகோணமலை மாவட்டத்தை குழு வந்தடைந்தள்ளது.

நேற்று நிலாவெளி லக்ஷ்மி நாராயணன் ஆலயம் மற்றும் சல்லி அம்மன் ஆலயத்தில் குழு தங்கியிருந்தது.

இன்று பாதயாத்திரை குழுவின் தலைவரான சி.ஜெயராசா தலைமையில் தொண்ணூறு அடியார்களை கொண்ட குழுவினர் திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தை சென்றடைந்து அங்கு பூஜையில் கலந்து கொள்கிறார்கள்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.06.2022இல் வெளியிடப்பெற்றது.